செ.வெ.எண்-29 நாள்-17.09.2020

# அரியலூர் மாவட்டம்
# அருள்மிகு கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி மாத விழாவை முன்னிட்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி மாத விழாவை முன்னிட்டு நடைபெறும் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (17.09.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கல்லங்குறிச்சி கிராமம் அருள்மிகு கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் நடைபெறும் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கோவிட் 19 தொற்று பரவாமல் இருக்க தமிழக அரசு தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நடைமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்கத் வேண்டும். தரிசனத்திற்காக பக்தர்கள் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மட்டுமே அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் முடிகாணிக்கை செலுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. அங்கப்பிரதட்சணம் செய்தல், திருக்கோயில் சுற்றுப்புறத்தில் சமையல் செய்வது, அன்னதானம் செய்வது, தற்காலிக பூக்கடைகள் நடத்துவது, டீ கடைகள் மற்றும் இதர கடைகள் அமைப்பது குறித்து தனிநபர்களுக்கோ அல்லது எந்தவொரு அமைப்பிற்கோ அனுமதியில்லை. பக்தர்கள் தேங்காய், பழம், பூ கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு மணி நேரத்திற்கு 6 அடி இடைவெளியில் 300 பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர். அனைத்து பக்தர்களும் சமூக இடைவெளியைப் பின்பற்றி வரிசையாக வருவதை காவல்துறையினர் முறைப்படுத்துவர். அதற்கு பக்தர்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

திருக்கோயிலுக்கு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பக்தர்கள் வரிசையில் நிற்கும்போதும், வெளி இடங்களிலும் தனிமனித இடைவெளி 6 அடி கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும். அரியலூர் மார்க்கத்திலிருந்து வரும் பக்தர்கள் தங்களுடைய வாகனங்களை அரசு சிமெண்ட் மைதான வாகன நிறுத்தத்திலும் கடுகூர் மார்க்கத்திலிருந்து வரும் பக்தர்கள் தங்களுடைய வாகனங்களை மணக்குடி வாகன நிறுத்தத்திலும், சீனிவாசபுரம் மார்க்கத்தில் வரும் வாகனங்கள் கல்லங்குறிச்சி சுகாதார நிலையத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள வாகன நிறுத்தத்திலும், காட்டுப்பிரிங்கியம் மார்க்கத்தில் வரும் வாகனங்கள் கல்லங்குறிச்சி புது ஏரி அருகில் அமைந்துள்ள வாகன நிறுத்தத்திலும் வாகனங்களை நிறுத்த காவல்துறை மற்றும் போக்குவரத்துத்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தானியங்கள் செலுத்த திருக்கோயிலுக்கு வெளிப்புறத்தில் தனியே இடம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் பக்தர்கள் தானியங்களை செலுத்திவிட்டு வரிசையில் செல்ல வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் 10 வயதிற்கு குறைவாக உள்ளவர்களும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களும், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சுவாசக்கோளாறு, இருதய நோய் போன்ற இணைநோய் உள்ளவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் கோவிலுக்கு வருவதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். மேலும், தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதித்து உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். முகக்கவசம் அணியாதவர்களிடம் ரூ.200/- தண்டம் வசூலிக்கப்படும். எச்சில் உமிழ்பவர்களிடம் ரூ.500/-தண்டம் வசூலிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, கோட்டாட்சியர் கண்மணி, வட்டாட்சியர் சந்திரசேகரன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**